ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2389/09 - 2024 ජූනි මස 18 වැනි අඟහරුවාදා - 2024.06.18
*2389/09 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) – மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மாத்தறை பிரதேச சபை

*களியாட்ட வரி விதித்தல் – 2024*

***1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்***

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரி திருத்தச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவது களியாட்ட நடவடிக்கைகளுக்கு உட்பிரவேசிப்பதற்காக செய்யப்படுகின்ற மொத்த பிரவேசப் பத்திரங்களின் பெறுமதியில் நூற்றுக்கு 10% இற்குச் சமமாக பணத்தை களியாட்ட வரியாக விதித்து அறவிடப்பட வேண்டுமெனவும், 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவில் குறித்த ஒழுங்குவிதிகளின்படி மாத்தறை பிரதேச சபையினால் 2023.08.08 ஆந் திகதிய தீர்மானப் புத்தகத்தின் தீர்மான இலக்கம் 2023/08/08/03 இன் கீழ் எடுக்கப்பட்ட தீர்மானத்தை தென் மாகாண கௌரவ ஆளுநர் விவி கமகே ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணைவிதிக்கு) ஏற்ப எனக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் அனுமதிக்கப்பட்டதாக இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

**கலாநிதி விலியம் விஜேசிங்ஹ கமகே,**
கௌரவ ஆளுநர்,
தென் மாகாண சபை.

ஆளுநர் செயலகம்,
காலி,
*2024, சனவரி 26.*

**தீர்மானம்**

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரி திருத்தச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் உப பிரிவின்படி கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம், மாத்தறை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நடத்தப்பட்டு வரும் குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவது களியாட்ட நடவடிக்கைகளுக்கு உட்பிரவேசிப்பதற்காக செய்யப்படுகின்ற மொத்த பிரவேசப் பத்திரங்களின் பெறுமதியில் நூற்றுக்கு 10% இற்குச் சமமாக பணத்தை களியாட்ட வரியாக விதித்து அறவிடப்பட வேண்டும் எனும் கருத்தை 2023.09.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படவென கருத்துத் தெரிவிக்கின்றேன். அவ்வாறு மேலே விதிக்கப்பட்ட களியாட்ட வரியினை குறித்த களியாட்ட நடவடிக்கை நடத்தப்படும் திகதிக்கு முன் தினம் குறித்த அமைப்பால் அல்லது அமைப்பாளர்களினால் முறையாக மாத்தறை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டுமென்று மேலும் இதன் பிரகாரம் நான் தீர்மானித்துள்ளேன்.*

EOG *06-135/1*

---

**வெலிகம பிரதேச சபை**

*களியாட்ட வரி அறவிடல்*

***1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்***

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரி (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், மாத்தறை மாவட்டத்தின் வெலிகம பிரதேச சபையினால் 2023, ஒற்றோபர் 30 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 2023/10/30/01 இன் கீழ் எடுக்கப்பட்ட தீர்மானத்தை 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணைவிதி) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) அத்தியாயத்தின் கீழ் வாசிக்கப்பட்டதும், 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தன் இரண்டாம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் தென் மாகாண கௌரவ ஆளுநர் கலாநிதி விலியம் விஜேசிங்க கமகே ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டதாக இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

**கலாநிதி விலியம் விஜேசிங்ஹ கமகே,**
*கௌரவ ஆளுநர்,*
*தென் மாகாண சபை.*

*ஆளுநர் செயலகம்,*
*காலி,*
*2023, திசெம்பர் 29.*

**தீர்மானம்**

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரி திருத்தச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் உப பிரிவின்படி கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம், வெலிகம பிரதேச சபையின் நிருவாக எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நடத்தப்பட்டு வரும் குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவது களியாட்ட நடவடிக்கைகளுக்கு உட்பிரவேசிப்பதற்காக செய்யப்படுகின்ற மொத்த பிரவேசப் பத்திரங்களின் பெறுமதியில் நூற்றுக்கு 10% இற்குச் சமமாக பணத்தை களியாட்ட வரியாக விதித்து அறவிடப்பட வேண்டும் எனும் கருத்தை உடன்பாட்டுடன் விளம்பரப்படுத்திய, விளம்பரப்பத்திரத்தின் திகதியிலிருந்து எதிர்வரும் மாதத்தின் முதலாம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படுவதாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) ஆம் சரத்தின் கீழ் எனக்கு கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் 2023, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 2023/10/30/01 இன் கீழ் தீர்மானிக்கின்றேன்.*

EOG *06-135/2*

## பிட்டபெத்தர பிரதேச சபை

கேளிக்கை வரி

**1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்**

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்தின் கீழான கேளிக்கை வரி (திருத்தம்) இன்படி 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க 2(1) ஆம் பிரிவின்கீழ் பொழுதுபோக்கு நிகழ்ச்சி நடவடிக்கைக்காக அறவிடப்படும் பிரவேசக் கட்டணத்தில் 10% கேளிக்கை வரி அறவிடப்பட வேண்டுமென 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரி 2(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிட்டபெத்தர பிரதேச சபையால் 2022.12.20 ஆந் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தின் இல. 01 இன் மூலம் முன்மொழியப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட சட்டத்தை தென் மாகாண கௌரவ ஆளுநர் வில்லியம் விஜேசிங்க கமகே ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 இலக்கத்தின் பிரதேச சபை சட்டதிட்டத்தின்படி எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கின்றேன்.*

**கலாநிதி விலியம் விஜேசிங்ஹ கமகே,**
*கௌரவ ஆளுநர்,*
*தென் மாகாண சபை.*

*ஆளுநர் செயலகம்,*
*காலி,*
*2023, திசெம்பர் 29.*

**முன்மொழிவு**

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க கேளிக்கை வரி (திருத்தம்) சட்டத்தில் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழான துணைப்பிரிவு 2(1) மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி பிட்டபெத்தர உள்ளூராட்சி மன்றத்தின் நிர்வாக எல்லைக்குள் நடாத்தப்படுகின்ற மேற்படி கட்டளைச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள எந்த ஒரு பொழுதுபோக்கு நடவடிக்கைக்காகவும் செலுத்தப்படுகின்ற கட்டணத்திலிருந்து 10% (பத்து சதவீதம்) சமமான தொகையை கேளிக்கை வரியாக விதித்து பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் இந்த முன்மொழிவு 2023.01.01 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்பட வேண்டும். மேலே விதிக்கப்பட்ட கேளிக்கை வரியானது சம்பந்தப்பட்ட அமைப்பு அல்லது ஏற்பாட்டாளர்களால் அந்தக் கேளிக்கை வரி விழா நடைபெறும் திகதிக்கு முன் முறையாக உள்ளூராட்சி மன்றத்துக்குச் செலுத்தப்பட வேண்டும் என்று உள்ளூராட்சி மன்றம் மேலும் பரிந்துரைக்கின்றது.*

EOG *06-135/3*

---

## வெலிவிட்டி திவித்துரை பிரதேச சபை

**1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கேளிக்கை வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்**

*1984 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் (267 ஆவது அதிகாரமான) 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய கேளிக்கை வரிக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில் (1) ஆவது உப பிரிவில் வெலிவிட்டி திவித்துரை பிரதேச சபைச் செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க 2023.11.03 ஆந் திகதிய 171 ஆம் பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவில் (1) ஆவது உப பிரிவில் (அ) பந்தியுடன் வாசிக்கப்படுகின்ற கேளிக்கை வரிக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது (2) பிரிவின் உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலியம் விஜேசிங்ஹ கமகே ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறிவிக்கின்றேன்.*

**கலாநிதி விலியம் விஜேசிங்ஹ கமகே,**
*கௌரவ ஆளுநர்,*
*தென் மாகாண சபை.*

*ஆளுநர் அலுவலகம்,*
*காலி,*
*2024, மாச்சு 15.*

**முன்மொழிவு**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட்டது (267 ஆம் அதிகார சபை) 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில் (1) ஆம் உப பிரிவில் வெலிவிட்டி திவித்துரை பிரதேச சபைச் செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க வெலிவிடி திவிதுரை பிரதேச சபை நிர்வாக பிரதேசத்தில் நடாத்திச் செல்லும் மேற்கூறப்படக்ட களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் களியாட்ட நடவடிக்கைக்குச் செலுத்தப்பட்ட கட்டணத்திலிருந்து 10% (பத்து சதவீதம்) இற்குச் சமமான தொகையை வரியாக விதித்து அறவிடுவதற்கும், இந்தத் தீர்மானம் அரசு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், தீர்மானம் செய்யப்பட்டன. என்றாலும் மேல் விதிக்கப்பட்ட களியாட்ட வரி அதன் களியாட்ட செயல்களுக்காக தொடங்கும் திகதிக்கு முன் தொடர்புடைய அமைப்பாளர் அல்லது அமைப்பாளர்கள் அல்லது அவர்கள் சரியான முறைக்கு வெலிவிட்டி திவித்துரை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும் என்றும் தீர்மானம் செய்யப்பட்டன.*

EOG *06-135/4*